சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.109/2018

09.04.2025

வா.சா.1 திரு.சேகர், த/பெ. தெட்சிணாமூர்த்தி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.14 ஆவணத்தில் கண்ட வழக்கை நானும் நடத்தினேன் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தி இறந்ததால் வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. அந்த வழக்கின் தீர்ப்பு நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மே.மு.வ.எண்.22/2019 வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை. மணிவண்ணனும், கமலக்கண்ணனும் தான் தாக்கல் செய்துள்ளார்கள். அ.வ.எண்.38/2006 வழக்கில் பலமுறை விசாரணைக்கு ஒத்திவைத்து நான் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வழக்கை மேல்நடத்தாததால் தான் அந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு தீர்ப்பு சாதகமாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. அ.வ.எண்.38/2006 வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே நான் வழக்கை முடித்துவிட்டேன் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா கட்டிடத்தில் ரிப்பேர் செய்ததாக வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 02.01.1982 தேதியிட்ட ரசீதில் பணம் செலுத்துபவர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் ரசீது வரிசைகள் 23 எனது கையொப்பமும் எனது தகப்பனார் கையொப்பமும் உள்ளது என்றால் சரிதான். அந்த ரசீதுகள் (23 வரிசை) பி.வா.சா.ஆ.1 ஆகும். பி.வா.சா.ஆ.1 ரசீதின் படி நான் தாவா சொத்தின் வாடகைதாரர் என்றால் சரிதான். தாவா சொத்திலுள்ள கடையில் நான் தற்போதும் பிரஸ் வைத்து நடத்திவருகிறேன். என்னிடம் காட்டப்படும் 6 போட்டோக்களில் உள்ள இடம் தாவா சொத்து என்றால் சரிதான். (வாதி தரப்பு போட்டோ எடுத்த நபர் மூலமாக குறியீடு செய்யப்படவேண்டும் எனவும் போட்டோ எடுத்ததற்கான ரசீது தாக்கல் செய்யப்படவில்லை எனவும் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது). 6 போட்டோக்கள் மற்றும் சி.டி.1 - பி.வா.சா.ஆ.2 ஆகும். தாவா சொத்திலுள்ள கடைக்கு கடந்த 25 வருடங்களாக வாடகை கொடுத்ததற்கான ரசீதை தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை. கடந்த 25 வருடங்களாக வாடகை கொடுத்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. எனது சகோதர, சகோதரி முகவரி எனக்கு தெரியும். முகவரி நன்கு தெரிந்தும் சரியான முகவரிக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிரதிவாதிகள் கடை கட்டிடத்தின் மேல் குப்பைகளை கொட்டவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு வழக்குமூலம் இல்லாமல் கற்பனையாக சொல்லி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கட்டிடம் தற்போது 400 சதுரடியில் உள்ளது. எந்தவித முகாந்திரமும் இல்லாமல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.